இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

“மக்கள் எல்லாரும் திருமுழுக்குப் பெறும் வேளையில் இயேசுவும் திருமுழுக்குப் பெற்று, இறைவனிடம் வேண்டிக்கொண்டிருந்த போது வானம் திறந்தது. தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர்மீது இறங்கியது. அப்பொழுது, “என் அன்பார்ந்த மகன் நீயே, உன் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது.”
(லூக்கா 3:21–22)

# மேற்கு மலேசிய திருஅவையில் யூபிலி ஆண்டு 2025 திறப்பு விழா கண்டது

### கோலாலம்பூர் உயர் மறைமாவட்டத்தில்...

கோலாலம்பூர்: கோலாலம்பூர் பேராயர், ஜூலியன் லியாவ் எதிர்நோக்கின் யூபிலி ஆண்டை டிசம்பர் 29 அன்று புனித யோவான் (St. John) நற்செய்தியாளர் பேராலயத்தில் தொடக்க சிறப்பு வழிபாட்டுடன் தொடக்கி வைத்தார்.

பேராயருடன், மலேசியாவின் திருத்தூது நுன்சியோ, பேராயர் வோஜ்சிக் ஜாலுஸ்கி; பேரருட் தந்தையர்கள் பேட்ரிக் பொட்வில், தனிஸ்லாஸ் சூசைமரியம் மற்றும்,



கோலாலம்பூர் புனித யோவான் பேராலயத்தில்

புனித யோவான் பேராலயத்தின் பங்குத் தந்தை ஜெரார்ட் திரவியம் ஆகியோ ருடன் உயர் மறைமாவட்டத்தின் அருள் பணியாளர்களும் கலந்து கொண்டனர். திருச்சடங்கானது, பேராலயத்தின் நுழை வாயிலில் அறிமுக சடங்குகளுடன் தொடங் கியது.

பேராயர் ஜூலியன் அவரது மறையுரையில், யூபிலி ஆண்டின் கருப்பொருளைப் பற்றி பேசினார், ‘எதிர்நோக்கு ஒருபோதும் ஏமாற்றம் தராது (உரோ 5:5) என்றும், யூபிலி ஆண்டு எதிர்நோக்கிலும் கிறிஸ்துவிலும் உறுதிப்பட வேண்டிய நேரம் என்று அவர் கூறினார். “இயேசு கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, இறப்பு மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய நமது எதிர் நோக்கின் இதயத்தை நாம் மறந்து விடக்கூடாது என்றும், கிறிஸ்து இறந்தபோது கல்லறையிலேயே தங்கிவிட வில்லை. மாறாக, அவர் மரணத்தையும் பாவத்தையும் வென்றார், அவரை நம்புகிற நாம் நிலைவாழ்வைப் பெறுவோம், இதுவே நமது எதிர்நோக்கு” என்றார்.

பின்னர், எதிர்நோக்கின் யூபிலி ஆண்டின் திருப்பயணத்திற்கான ஐந்து புனித திருத்தலங்களாக இந்த உயர் மறை மாவட்டத்தின் ஐந்து தேவாலயங்கள் அறிவிக்கப்பட்டன. அவை:

1. தலைநகரில், புனித யோவான் பேராலயம்
2. கெப்போங்,ஜீசஸ் கரித்தாஸ் ஆலயம்,
3. செராஸ், புனித பிரான்சிஸ் அசிசியார் ஆலயம்,
4. குவந்தான் புனித தோமையார் ஆலயம்
5. போர்ட்டிக்கசன் அமலோற்பவ அன்னை ஆலயம்.

புனித யாத்திரைக்குப் பிறகு, நம்மைச் சுற்றியுள்ள மக்களுக்கு, குறிப்பாக புலம்பெயர்ந்தோர், நோயாளிகள் மற்றும் முதியவர்கள், கைதிகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நம்பிக்கையின் அடை யாளமாக இருக்க வேண்டும், என்றார்.

### பினாங்கு மறைமாவட்டத்தில்...

#### நம்பிக்கையில் ஒன்றுபட்டவர்களாக திருப்பயணத்தைத்தத் தொடங்குகிறோம்

கடந்த ஞாயிற்றுக்கிழமை, 29 டிசம்பர் 2024 அன்று, பினாங்கு மறைமாவட்டத்தின் ஆயர், கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ், அவர்கள் தூய ஆவியார் பேராலயத்தில் 2025 ஆம் ஆண்டின் எதிர்நோக்கின் யூபிலி ஆண்டிற்கான தொடக்கத் திருப்பலியைக் கொண்டாடினார்.

இன்று, தூய ஆவியாரும், தலைமை ஆயரான திருத்தந்தை பிரான்சிஸ் இந்த திருப்பயணத்தினைப் புதுப்பித்தலோடும், ஒப்புரவோடும் கத்தோலிக்க திருஅவையில் ஓர் உடலாக பயணிக்க தூய ஆவியார் ஆசீர்வதிப்பார் என்று கர்தினால் தெரிவித் தார். அன்றைய திருப்பலியில் ஓய்வுப்பெற்ற ஆயர் அந்தோனி செல்வநாயகம், பேரருட்தந்தையர்ஹென்றி ராஜூ, ஜூட் மிராண்டா, ஸ்டீபன் லியூ மற்றும் அருள் பணியாளர்கள் ஜோகிம் ரோபர்ட், மார்ட்டின் அர்லாண்டோ இவர்களோடு, பினாங்கு மறைமாவட்டத் தில் யூபிலி ஆண்டின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்பாளர்கள், மற்றும் திருத் தொண்டர் என்ரூ லோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

அவரது மறையுரையில், கார்தினால் செபஸ்தியன் எதிர்நோக்கு குறித்துப் பகிர்ந்து கொண்டார். எதிர்நோக்கின் திருப்பயணிகளாக அதன் உத்வேகத்தை ஏற்று, எப்போதும் எதிர்நோக்கை உயிருடன் வைத்திருக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார். வானத்தூதர் கபிரியோல், தூய ஆவியார் மற்றும் விரைவில் புனிதராக அறிவிக்கப்படவுள்ள கார்லோ அகுடிஸ் ஆகியோரால் வழிநடத்தப்பட வேண்டும் என்று விண்ணப்பத்தை முன்வைத்தார்.

நிறைவாக, எதிர்நோக்கின் யூபிலி ஆண்டின் திருப்பயணத்திற்காக பினாங்கு மறைமாட் டத்தில் அர்ப்பணிக்கப்பட்ட மூன்று பங்குகள் அறிவிக்கப்பட்டன. அவை:

1. பெர்மாத்தாங் திங்கியில் அன்னை மரியாவின் தூய பெயர் ஆலயம்.
2. ஜோர்ஜ் டவுன், புனித விண்ணேற்பு ஆலயம்.
3. ஜெலாப்பாங், அன்னை வேளாங்கண்ணி சிற்றாலயம் (புனித ஆரோக்கிய அன்னை பங்கு)

### மலாக்கா- ஜோகூர் மறைமாவட்டம்.

கடந்த, 29 டிசம்பர் 2024 அன்று, திருக்குடும்ப விழா நாளன்று, மலாக்கா ஜோகூர் மறைமாவட்டத்தின் ஆயர பெர்னர்ட் போல் அவர்கள், மறை மாவட்டத்தின் அருள்பணியாளர்களுடன் இணைந்து, இயேசுவின் திருஇருதயம் பேராலயத்தில் 2025 யூபிலி ஆண்டின் தொடக்கத்தை கொண்டாடினர்.

பேராலயம் மற்றும் தெற்கு ஜோகூர் பங்குகளில் இருந்து ஏறக்குறைய 800 க்கும் மேற்பட்ட இறைமக்கள் இத்தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். யூபிலி ஆண்டின் புனிதமான தொடக்கமாக,

தொடர்ச்சி, அடுத்தப் பக்கம்....


பினாங்கு, தூய ஆவியார் பேராலயத்தில்

# யூபிலி ஆண்டு 2025 திறப்பு கொண்டாட்டம் (முதல் பக்கத் தொடர்ச்சி)

இயேசுவின் திருஇருதயம் பேராலயத்தின் சிலுவையின் பின்னால் பவனியாக பேராலயத்தினுள் நுழைவதாக அமைந்தது. தேவாலய கட்டிடத்திற்கு வெளியே உள்ள வாகனம் நிறுத்தும் பகுதியில் 3 சிலுவை கள் கொண்ட பவனி தொடங்கியது. வெளிப்படுத்தினார்.

இறுதியாக. எதிர்நோக்கின் யூபிலி ஆண்டின் திருப்பயணத்திற்காக மலாக்கா-ஜொகூர் மறைமாட்டத்தில் அர்ப்பணிக்கப்பட்ட மூன்று பங்குகள் அறிவிக்கப்பட்டன. அவை:


ஜொகூர் பாரு, திருஇருதய ஆண்டவர் பேராலயத்தில்

ஆயர் பெர்னர்ட் போல், அவரது மறையுரையில், "நாம் திருப்பயணிகளாகவும், திருப்பயண குடும்பங்களாகவும், திருப்பயண திருஅவையாகவும் எதிர் நோக்கின் திருப்பயண அருள்பணியாளர்களாகவும் அழைக்கப்பட்டுள்ளோம் என்று கூறினார். அவர் மேலும், நாம் யார்? என்று சிந்திக்கவும் அனைவரும் திருப் பயணிகளாகத் திரும்ப வேண்டும் என்று கூடியிருந்தோருக்கு அழைப்பவிடுத்தார். திருப்பயணம் என்பது கடவுளைச் சந்திக்கும் ஒரு வழியாகும். வலிகள் மற்றும் துன்பங்களுக்கு மத்தியில் எவ்வாறு பயணிப்பது என்பதை திருப்பயணம் உணர்ந்துவதாக ஆயர் பகிர்ந்து கொண்டார். ஆண்டவர் அழுக்கிலும், தொழுவத்திலும் இருக்கிறார் என்பதை மேற்கோள் காட்டி திருப்பயணத்தின் சிறப்பை விவரித்தார். விண்ணகத்தில் இருந்து மண்ணகத்திற்கு ஆண்டவர் வந்ததையும் ஒரு திருப்பயணமாக ஆயர்

1. ஜொகூர் பாரு,திருஇருதய ஆண்டவர் பேராலயம்.
2. குளுவாங், புனித பிரகாசியார் ஆலயம்.
3. மலாக்கா, புனித மரியா ஆலயம்.

### திருத்தந்தையின் மாதாந்திர இறைவேண்டல் கருத்து



சனவரி 2025

**கல்வி உரிமைக்காக புலம்பெயர்ந்தோர், அகதிகள், போரினால் பாதிக்கப்பட்டோருக்கான கல்வி உரிமை, ஒரு சிறந்த உலகத்தைக் கட்டி எழுப்பத் தேவை என்பது எப்போதும் மதிக்கப்பட நாம் மன்றாடுவோம்**

# மலேசியாவின் கரித்தாஸ் பணியகத்தின் புதிய செயலவை உறுப்பினர் நியமனம்

மலேசிய திருஅவையின் ஏழைகளுக்கு உதவும் பணியகமான கரித்தாஸ் அமைப்பு அதன் ஈரண்டுக்கான உறுப்பினர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. இவர்கள் 2025, சனவரி முதல் திகதியிலிருந்து பணியைத் தொடங்குவர். அன்பு, இரக்கம் மற்றும் நீதியின் மதிப்பீடுகளில் வேரூன்றிய மலேசியா இருஅவையின் சமூகப் பணியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான



கூட்டுப் பயணத்திற்கு இந்த தலைமைத்துவம் ஒரு முக்கிய பங்காற்றும் என கருதப்படுகிறது. தருணத்தைக் குறிக்கிறது.

பணிக்காலம் முடிவுற்று வெளிச்செல்லும் குழு உறுப்பினர்களின் அர்ப்பணிப்பான சேவை, ஞானம் மற்றும் பங்களிப்புக்கு காரிடாஸ் மலேசியாவின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நியமனம் பெற்ற புதிய உறுப்பினர்கள் பின்வருமாறு:

Ms. எனி லசிம்பாங்
Dr. பிரான்சிஸ் லோ
Fr. எல்வின் இங்
Ms.ஜொயிஸ் வோங்
Mr. ஜோக்கிம் சேவியர்
Ms. சாரா சாவ்

மேற்கண்டவர்கள் நல்ல அனுபவமும், நுண்ணறிவும், பேரார்வமும் கொண்டவர்கள். புதிய முன்னோக்கு மற்றும் புதுப்பித்தல் ஆற்றலுடன், இவர்கள், ஒத்துழைப்பை ஆழமாக்குவதற்கும், திட்டங்களை வலுப்படுத்துவதற்கும் மற்றும் காலநிலை மாற்றம், புலம் பெயர்ந்தோர் மற்றும் ஏழைகளின் அழுகை உட்பட எதிர்கொள்ளும் அனைத்து சவால்களை எதிர்கொள்வதில் அர்ப் பணிப்புடன் செயலபடுவர்.

நாம் முன்னேறும்போது, அன்பு மற்றும் சேவை செய்வதற்கான நற்செய்தி அழைப்பைப் ஏற்பதில் Caritas Malaysia உறுதியாக உள்ளது. புதிய நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கான இறைவேண்டல் ஆதரவில் எங்களுடன் சேர அனைத்து நம்பிக்கையாளர்களையும் ஒத்துழைப் பாளர்களையும் அழைக்கிறோம்.

அனைவருக்கும் நம்பிக்கையின் அடையாளமாகவும் அன்பின் கலங்கரை விளக்கமாகவும் மாறும் ஒரு திருஅவையைக் கட்டியெழுப்புவதில் நமது அர்ப்பணிப்பில் ஒன்றித்திருபோம்.

இப்படிக்கு,
ஆயர் பெர்னர்ட் போல்.
ஆயர் தலைவர், கரித்தாஸ் மலேசியா






# திருமுழுக்கால் மறு கிறிஸ்துவானோம்!

இன்று பொது காலத்தின் முதல் ஞாயிறு, ஆண்டவரின் திருமுழுக்கு விழாவைக் கொண்டாடுகிறோம். எசாயா நூலியிருந்து எடுக்கப்பட்ட முதலாம் வாசகத்தில்(40:1-5;9 -11), கடவுள் நம் அனைவருக்கும் ஓர் அழைப்பு விடுக்கிறார். இந்த அழைப் பிற்கிணங்கினால் நம்மை ஒன்றுசேர்க்கப் படுவோம், பாதுகாக்கப்படுவோம் எனக் கடவுள் உறுதியளிக்கிறார்.

மனிதர் அனைவருக்கும் மீட்பின் அருள், நீரினாலும் தூய ஆவியாலும் வழங்கப் பட்டுள்ளது என்று இரண்டாம் வாசகம் (தீத்து2:11-14;3:4-7) மறுஉறுதிப்படுத்துகிறது. நமது அறச்செயல்களால் அல்ல, கடவுளின் இரக்கத்தால் என்பதையும் தீத்துவிற்கு எழுதப்பட்ட திருமுகம் கூறுகிறது.

இதர நற்செய்தி நூல்களைப் போல், இயேசுவின் திருமுழுக்கு பற்றிப் பேசும் இன்றைய லூக்கா நற்செய்தி மீட்பர் யார் என்பதில் குழப்பமடைந்திருக்கும் மக்களுக்குத் தெளிவுரை நிகழ்த்துகிறது. திருமுழுக்கு யோவான் மீட்பராக இருப்பாரோ என்ற எண்ணம் மக்களிடையே நிலவுவதை அவர் களைகிறார். இயேசு கொடுக்கப்போகும் திருமுழுக்கிற்கும் தாம் கொடுக்கும் திருமுழுக்கிற்கும் இடையிலான வேற்றுமையையும் யோவான் சுட்டிக்காட்டுகிறார். “நான் தண்ணீரால் உங்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கிறேன்; ஆனால் என்னைவிட வல்லமைமிக்க ஒருவர் வருகிறார்...அவர் தூய ஆவி என்னும் நெருப்பால் உங்களுக் குத் திருமுழுக்குக் கொடுப்பார்” (3:16).

இயேசு தூய ஆவியாலும் நெருப்பாலும் திருமுழுக்குக் கொடுப்பார் என்றால், இரண்டாவது முறையாக நாம் திருமுழுக்குப் பெற வேண்டுமா? முதலில், பாவமே செய்யாத இயேசு ஏன் யோவானிடம் திருமுழுக்குப் பெற வேண்டும்?

கடந்த ஞாயிறு நாம் கொண்டாடிய ‘ஆண்டவரின் திருக்காட்சி’ விழா, உலகிற்கு இறைமகன் இயேசுவை வெளிப்படுத்தியது, மூன்று ஞானிகளின் வருகையால். இயேசுவின் திருமுழுக்கு, ‘இரண்டாவது திருக்காட்சி’ அல்லது வெளிப்பாடு எனக் கூறலாம். இன்றைய நற்செய்தியில், மூவொரு கடவுள் வெளிப்படுகின்றார். “என் அன்பார்ந்த மகன் நீயே” (3:22) எனத் தந்தையாகியக் கடவுளின் குரல் ஒலிக்கிறது. “தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் (இயேசு) மீது இறங்கியது” (3:21) ஆவியானவரைச் சுட்டுகிறது. அதனைப் பெறுபவர் இயேசு.

இன்றைய நற்செய்தியைத் தொடர்ந்து



வாசித்தால்(3:23-38), இயேசுவின் மூதாதையர் பட்டியலை புனித லூக்கா தருகிறார். அந்தப் பட்டியலின் இறுதியில், முதன் மனிதன் ஆதாம் கடவுளின் மகன் எனக் குறிப்பிடப்பட்டிருக்கும். நாம் ஆதாம்-ஏவாளின் பிள்ளைகள், திருமுழுக்கின் வழி மீண்டும் கடவுளின் பிள்ளைகள் ஆகிறோம். இதுவே திருமுழுக்கின் அடிப்படை உண்மை. எனவே, இரண்டாம் வாசகத்தில் (தீத்து2:12) பவுல் அடியார் கூறுவதுபோல், உலகு சார்ந்த நாட்டங்களையும் மறுத்து, கட்டுப்பாடுடனும் நேர்மையுடனும் இறைப் பற்றுடனும் இம்மையில் வாழ இறையருளால் பயற்சி பெறுவோம், நமது திருமுழுக்கையும் நினைவுகூர்வோம்.

*அந்தோணி இன்னாசி, சைபர்ஜெயா*

### ஆண்டவரின் திருமுழுக்கு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | எசா 40: 1-5, 9-11 |
| திரு.பாடல் | 104:1-2.3-4.24-25.27-28.29,30 |
| 2-ம் வாசகம் | தீத்து 2: 11-14; 3: 4-7 |
| நற்செய்தி | லூக்கா 3: 15-16, 21-22 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை:ஆண்டவரின் திருமுழுக்கு**